# வெளியே போங்க...!

எளிய மக்களின் பெரும் நம்பிக்கையாக தமிழ்நாட்டின் கல்வி அமைப்பு திகழ்ந்து கொண்டிருக்கிறது. தங்களின் பிள்ளை களையும் தங்களது தலைமுறையையும் கல்வியால் முன்னேற்றிவிடலாம் எனும் பேராவல் அடித்தட்டு மக்களிடம் இருக்கிறது. அதன் காரணமாகத்தான் தாங்கள் என்ன மாதிரியான பொருளாதார சமூக இன்னல்களுக்கு ஆளானாலும், தங்களின் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதை முதன்மை பணியாக கருதுகிறார்கள் விளிம்புநிலையில் உள்ள மக்கள். தங்களின் வீட்டில் என்ன சுக துக்கங்கள் நிகழ்ந்தாலும் பிள்ளைகளை உடனடியாக பள்ளிகளுக்கு அனுப்புவதை கடமையாகவே செய்து வருகிறார்கள் நமது மக்கள்!

இதுபோன்ற நம்பிக்கை அளிக்கும் கல்வி அமைப்பிற்கு பெரும் வெளிச்சமாக இருப்பது அரசுப் பள்ளிகள்தான்! அரசுப் பள்ளிகள்தான் எளிய மக்களின் எதிர்கால அரணாகத் திகழ்கிறது. விடுதலைக்குப் பிறகான தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றங்கள் நடந்தாலும், ஒவ்வொரு ஆட்சியாளரும் பள்ளிகளில் மகத்தான சாதனைகளை படைத்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தொடர்ச்சி என்பது அரசியல் கடந்த சிந்தனையில் மகிழ்ச்சியை தரக்கூடியது. ஆனால் இன்றைய சூழலில் கல்வி அமைப்பை காக்கும் அரசுப் பள்ளிகள் எனும் பெருஞ்சுவற்றை தகர்க்கும் வேலைகள் நடந்துகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

**சமூக ஊடகங்களில் 'இனிமேல் இதுதான் கடவுள் வாழ்த்து...' என ஒரு படப்பாடலை காண்பித்து நய்யாண்டி செய்கிறார்கள். ஆனால் இந்த நய்யாண்டி என்பது உண்மையின் மறுவடிவமாகவே உள்ளது என்பதை மறுக்க முடியவில்லை. கவலை மேலோங்குகிறது!**

'A B C D, அ ஆ இ ஈ...' எனச் சொல்ல வேண்டிய மாணவச் செல்வங்களும், தாங்கள் படித்ததை ஆசிரியர்களிடம் வாசித்துக்காட்ட வேண்டிய மாணவர்களும் கைக்கட்டிக் கொண்டு 'நண்பா... நண்பா...' என படப்பாடலை பாடிக்கொண்டிருக்கிறார்கள். இதனை த.வெ. கட்சியினர் ரசித்து வீடியோவும் எடுத்துள்ளார்கள் என்பது வக்கிரமானது. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, அன்றாடப் பணியை செய்துகொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு இந்த அவலம் அந்நேரத்தில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பள்ளி முடிந்து வீட்டிற்கு வரும்



**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
*பள்ளிக் கல்வித் துறை முன்னாள் அமைச்சர்*

குழந்தைகளை அதட்டி 'டிவி பார்க்காம படி...' என்பார்கள் பெற்றோர்கள். **ஆனால் சில குரூரமானவர்கள் பள்ளிக்கு சென்ற குழந்தைகளிடம் 'படிக்காதே பாட்டுப் பாடு...' என்கிறார்கள். எளிய மக்களின் வருங்கால நம்பிக்கையை, ஒரு தலைமுறையை கெடுக்கும் செயல் தொடங்கியுள்ளது.**

உயர்கல்வித் துறை அமைச்சர் ஒரு பள்ளிக்கு சென்று நடனம் ஆடுகிறார். அதில் தவறில்லை. ஆனால், அந்தப் பாட்டின் வரிகளும், அங்கே வெளிப்பட்ட பக்குவமின்மையும் முகம் சுளிக்க வைக்கின்றன. "Good Touch Bad Touch" பற்றி சொல்லிக்கொடுக்க வேண்டிய அமைச்சரே குழந்தைகளிடம் நடந்து கொள்ளும் விதம் என்பது அமைச்சருக்கானது அல்ல. அநாகரிகமான செயலை அமைச்சரே செய்துகொண்டிருக்கிறார்!

யாரை குளிர்விக்க மாணவர்களை பயன்படுத்துகிறார்கள் ஆளுங்கட்சியினர் என்பது புரியவில்லை. மாணவர்களை கொண்டு முதலமைச்சரின் படத்தை வரைவது! முதலமைச்சர் படத்தை வரைந்து அதில் மாணவர்களை அமர வைத்து சாதனைகள் நிகழ்த்துவது என்பது யாருக்காக? மாணவர்கள் தங்களின் திறமையின் மூலம் சாதனை படைக்க ஊக்குவிக்க வேண்டும் எனும் எண்ணம் உங்கள் அரசுக்கும் உங்கள் கட்சிக்கும் இருப்பதாக தெரியவில்லை. இதுபோன்ற செயல்கள் மாணவர்களின் திசைவழியை மடைமாற்றுவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் நம்பிக்கையை சிதைப்பது ஆகும். "வாழ்க" கோஷத்தையெல்லாம் மாணவர்கள் சொல்ல தூண்டும் சமூக விரோதிகள் யார்? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தயவு செய்து பள்ளிகளை விட்டு வெளியே போய்விடுங்கள்!

பள்ளிகளுக்குள் நுழைய வேண்டும் என்றால் மக்கள் பிரதிநிதிகள்தான் செல்ல வேண்டும். கட்சி பிரதிநிதிகளுக்கு அங்கே எவ்வித அனுமதியும் கிடையாது! பள்ளி நிர்வாகம் அனுமதித்தாலும் அங்கே முதலமைச்சரின் போட்டோவை காட்டி மாணவர்களை உணர்ச்சி வசப்படுத்த எந்த அதிகாரமும் உங்களுக்கு கிடையாது! படிப்பறையில் மாணவர்கள் – ஆசிரியர்களை தவிர உங்களுக்கு என்ன வேலை? உங்களின் வெற்று புரட்சிகளை மக்களிடம் வந்து காண்பியுங்கள். உங்களின் செயல் மாணவர்களின் கைகளில் இருந்து புத்தகத்தை பிடுங்குவது போல் உள்ளது.

**இதை எடுத்துச் சொல்வதற்கு அக்கட்சியில் எவருமே இல்லை என்பதுதான் சகித்துக் கொள்ள முடியாத உண்மையாகவும் இருக்கிறது. பாசிச மனப்பான்மையில் முதலமைச்சரும் த.வெ.க தலைவருமான விஜய் உள்ளாரா? எனும் சந்தேகம் எழுகிறது. அடுத்த தலைமுறையின் கண்கள் புத்தகத்தையும் கரும்பலகையையும் மட்டுமே பார்க்க வேண்டுமே தவிர, உங்களின் அநாகரியங்களை பார்க்கக் கூடாது.** 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு' என்ற பேரறிஞர் அண்ணாவை மேற்கோள் காட்டும் தாங்கள், தங்களின் கட்சியினருக்கு கட்டுப்பாடு என்றால் என்ன? என ஒரு அறிக்கையாவது விட்டுள்ளீர்களா? கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் பள்ளிகளுக்கு த.வெ.க கொடியை கட்டுவதெல்லாம் உங்களின் கண்களுக்கு தெரிகிறதா சி.எம். சார். இதற்கு கூட வாயைத் திறக்க மாட்டீர்களா?

உங்களை நான் விமர்சிக்கவில்லை. உங்கள் குற்றங்களை சுட்டிக்காட்டவில்லை! அன்பான வேண்டுகோள் மட்டுமே விடுக்கிறேன்.

**'தயவுசெய்து அரசுப் பள்ளி மாணவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று மட்டும் சொல்லுங்கள். 'அவர்கள் பகுத்தறிவு கொண்ட மனிதர்களாக உருவாக வேண்டும். அதனால் அவர்களை தொந்தரவு செய்யாதீர்கள் நண்பா நண்பீஸ்' என ஒரு முறையேனும் சொல்லி விடுங்கள்.**

இனிமேலும் அரசு கண்ணைக் கட்டிக் கொண்டு இருக்கக் கூடாது! எளிய மக்களின் நம்பிக்கை காப்பாற்றப்பட வேண்டும். அரசுப் பள்ளி வளாகங்களுக்குள் அநாகரிமான செயல்களை அரங்கேற்றம் செய்யாதீர்கள்.

---

பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமை! எம்.ஆர்.சீனிவாசன் முன்னிலை! ஆ.கிருஷ்ணசாமி – படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

## மாங்காடு ர.ரவி - ர.ரோஜா இல்லத் திருமண வரவேற்பு!

### முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

*காஞ்சிபுரம், ஜூன் 24 -*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாங்காடு நகர தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ர.ரவி ர.ரோஜா ஆகியோரின் புதல்வர் ர.ராகுல்டிராவிட், மாங்காடு ஸ்ரீ சக்ரா நகர் ந.சுந்தர்ராஜன் சு.பெருந்தேவி ஆகியோரின் புதல்வி சு.காயத்ரி (எ) கமலி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நாளை (25.06.2026 - வியாழக்கிழமை), மாலை 6.00 மணியளவில் கல்யாணி திருமண மண்டபம், மாங்காடு பிரதான சாலை, சென்னை 122. ல் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பிற்கு மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தலைமை வகிக்கிறார்.

மாங்காடு நகரச் செயலாளர் எம்.ஆர்.சீனிவாசன் முன்னிலை வகிக்கிறார்.

ஜி.ராமு, எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ், சுசீலாஇராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர், பி. முருகையன், ஆர்.சாரதி, பி.ராஜேந்திரன், ஜெ.கனகராஜ், ஜி.முனுசாமி, டி. வாசுதேவன், ஆர்.புஷ்பராஜ், ஆர்.குமார், பி.மதியழகன், எஸ்.வேலுமணி, எல்.பிரகாஷ், டி.நெல்சன், ஆர்.விக்னேஷ், வி.ஜெபபோஸ், பி.முனுசாமி, ஏ. தமிழ்வாணன், பி.ராக்கி, டி.ராஜ்கிளின்டன், ஆர். சாம்வில்சன், ஆர்.உதயா, டி.மகிமைராஜ், வி.சுமன், ஏ.கார்த்திக், சே.பிரபு, எம். பாலாஜி, அ.டில்லி, பி.திருநாவுக்கரசு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மண விழா வரவேற்பில் முன்னாள் அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் . ஆ . கிருஷ்ணசாமி, குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மாங்காடு நகர் மன்ற தலைவர் திருமதி. சுமதி முருகன், அ. தமிழ்மாறன், தி.க.பாஸ்கரன், ஆர்.பாஸ்கரன், எம். ஆர்.வெங்கடேசன், ஏ.கே. அப்துல்ரஹ்மான், எம்.ஆர். எஸ்.கதி ரவன், டி.பெருமாள்ராஜ்,

சரளாவிஜயகுமார், மருத்துவர் க.ராஜேஷ், ஜி.ஞானவேல், எஸ்.நளினி, மா.அ.தம்பிதுரை, சாந்தி சம்பத், ராம்பியாரி லட்சுமணன், சரிதா ஞானவேல், க.மு.இஸ்மாயில், சி.தனசேகர், மேனகா கணபதி, சரஸ்வதி சீனிவாசன், அனுசுயா சத்தியசீலன், மோசினா அபிபுர்ரஹ்மான், யாஸ்மின் ஜபருல்லா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

கே.சந்திப், ஆர்.சக்தி, பி. சஞ்சய் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

பெருகும் வருமானத்தால் திருக்கோயில் பணிகளுக்கு உதவும் என்பதால் – நகராட்சி பரிந்துரையின் அடிப்படையில்

## குன்னூரில் 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டு வரப்பட்டது!

### சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 24-

சட்டப் பேரவையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசும்போது குறுக்கிட்டு கழக உறுப்பினர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-



இந்து சமய அறநிலையத் துறை கொடைகள் என்ற ஒரு சட்டம் இருக்கின்றது. அந்தச் சட்டத்தில் விதி 69 என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்தப் பணிகள், சட்ட விதிகளுக்கு உட்பட்டு, சட்டத்தின் 36வது பிரிவிலிருந்துதான் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பாக, ஏதோ அமைச்சரே முடிவு செய்து திருமண மண்டபங்களையும், வணிக வளாகங்களையும் ஏற்படுத்துவதற்கு உத்தரவிட்டதாக, அமைச்சர் அவர்கள் அவைக்கு உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்து கொண்டிருக்கின்றார்.

ஒவ்வொரு திட்டமும் அன்றைய காலகட்டத்தில் இருந்த சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய பரிந்துரையின் அடிப்படை யிலும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும் தான் அந்தந்தக் காலகட்டங்களில் கொண்டுவரப்பட்டது.

அதோடு மட்டுமல்லாமல், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினார்; குன்னூரிலே 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டுவரப்பட்டது என்று. நான் குன்னூரிலும், ஊட்டியிலும் ஐந்து நாட்கள் முகாமிட்டு, அங்கே இருக்கின்ற 56 கோயில்களுக்கும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். அந்த ஆய்வின் அடிப்படையில், அந்தத் திருக்கோயில்களுக்கு வருகின்ற பக்தர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான வருமானத்தை உயர்த்துவதற்காகவும், குன்னூருக்குச் சுற்றுலாவிற்கு வருகின்ற மக்களுடைய வாகனங்களை நிறுத்துவதற்குப் போதிய இடமில்லாமல் தவிக்கின்ற சூழ்நிலை யைக் கருத்தில் கொண்டும், நகராட்சியின் பரிந்துரையின் அடிப்படையில் 'மல்டி லெவல் கார் பார்க்கிங்' கொண்டுவந்தால், வருமானம் பெருகும்; அந்த வருமானம் திருக்கோயிலுடைய மேம்பாட்டுப் பணிகளுக்கு உதவும் என்பதற்காகத் தான் அந்தப் பணிகளை மேற்கொண்டோம் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது யார் அறிவுறுத்தி இந்த அரசாணையை வெளியிட்டிருக்கின்றாரோ, அவர் தான் அப்பொழுது ஆணையாளராக இருந்து, அவரது அறிவுறுத்தலின் பெயரில் அரசாணையை வெளியிட்டிருக்கின்றார் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு குறிப்பிட்டார்.

---

க.மோகன் தலைமை, சிவசங்கரய்யா முன்னிலை! த.ஜெயகுமார் வரவேற்புரை

## பம்மல் வடக்கு பகுதி - 3வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி சிறப்புரை!

*காஞ்சிபுரம், ஜூன் 24-*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 3வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம், 2162026 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணிக்கு, அனகாபுத்தூர் அன்னை மினி ஹாலில் வட்டக் கழக செயலாளர் க.மோகன் தலைமையில் நடைபெற்றது.

கழக மூத்த முன்னோடி சிவசங்கரய்யா முன்னிலை வகித்தார். பகுதிச் செயலாளர் த. ஜெயகுமார் வரவேற்புரையாற்றினார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி சிறப்புரை ஆற்றினர்.

நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.ரகு, ஆர்.எம்.முருகன், பி.ஆர். ரவி, ஆர்.கே.நரசிம்மன், பி.முரளி பகுதி கழக துணைச் செயலாளர் க.ஜெயசீலன், பகுதி கழக பொருளாளர் ச.பிரபு, மாநகரப் பிரதிநிதி இரா. பாபுஜி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஞா.பிரபு, தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆ.செந்தில்குமார், மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் எம்.டி. விஜயகுமார், கழக முன்னோடிகள் மோ. சுதாகர், செ. சவரிமுத்து, வீரபத்திரன், கா.சோமு, டி..கோபால், கே.எஸ். பாபு, ஜே.குமார், டி.அன்பு, ஆடிட்டர் சபீக், விஜயகணேஷ், குப்பன், சேகர், பி.ஏ. கண்ணையா, ராமமூர்த்தி, பாஸ்கர், ஜிந்தா பாய், திருபால், ரமேஷ், பாபுராஜ், தங்கராஜ், சொக்கலிங்கம், காண்டீபன், ஜெய்சங்கர், மோ.சரவணன், எஸ். ஜெயக்குமார், குமரேசன், இ.கருணாகரன், ஆட்டோ துரை, இ.மதிவாணன், இன்பராஜ், மணி, ஷேக், சத்யா, சந்திரன், கணேசன், தியாகராஜன், தினேஷ், ரூத்மேரி, தமிழ், அஜித், சேகர், குட்டி, சூர்யா, ஐயப்பா, மகேஷ், சண்முகம், நாகூர்மீரான், முருகன், பிரவீன், சரவணன், ஆனந்த், மதன், ரமேஷ், மற்றும் தாமு ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றிய வழக்கறிஞர் அணி அமைப்பாளர் திராவிட டில்லி இல்ல விழா ரெட்டில்ஸ் நெல்அரிசி திருமண மண்டபத்தில் நடைபெற்றது, இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் ந.ஜெகதீசன் கலந்து கொண்டு வாழ்த்தினர். உடன் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பத்தனர்.

---

நெல்லை எம்,எம்,சாமி தலைமை ! இரா,பொன்ராம் – ஜெ,விஜயகுமார் பங்கேற்பு !

## சலவை தொ.மு.ச.சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! நலஉதவிகள் !

### கி.நடராசன் – கோ.சி.வள்ளுவன் வழங்கினர் !

*சென்னை, ஜூன்.24-*

அகில இந்திய தொ.மு.ச.பொது செயலாளர் மு.சண்முகம் அவர்களின் அறிவுறுத்தலின்படி

தமிழ்நாடு சலவைத் தொ.மு.ச. சார்பில் சென்னை தொ.மு.ச பேரவை கலைஞர் அரங்கத்தில் முத்தமிழர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சலவைத் தொ. மு.ச.மாநில தலைவர் நெல்லை எம்.எம்.சாமி தலைமையில் கட்பீஸ் ப. சோமசுந்தரமூர்த்தி, வெ.சு.சத்தியநாராயணன், எஸ்.பி.எஸ்.புத்தன், ஜெ.சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேரவை தலைவர் கி.நடராசன், மற்றும் பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பேரவை நிர்வாகிகள் இரா.பொன்ராம், ஜெ. விஜயகுமார், பன்னீர்செல்வம், SCTC அலுவலக செயலாளர்கள் பன்னீர்செல்வம், சண்முகசுந்தரம், பத்மநாபன், அருண கிரிநாதன், சென்னை மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் எஸ்.சுந்தரமூர்த்தி, கே.இளங்கோவன், கி. கண்ணன், கே. தங்கராஜ், வி.யூ.கார்த்திகேயன், மோ.செந்தில்குமார், எஸ். யுவராஜ், சி.செந்தாமரை, பேரவை அமுல்ராஜ், அசோகன், விஜயகுமார், முருகன், கார்த்தி, சைதை ஜெயபால், கா.ரீதர், கிருஷ்ணாகிரி வெங்கடேசன், சிவக்குமார், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நெல்லை எம்.எம்.சாமி நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்திருந்தார்.

---

சேலம் மத்திய மாவட்டம்

## காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்டம், காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு. என்.பிரகாசம், எம்.ஏ., (110பி, பூசாரிப்பட்டி அஞ்சல், காடையாம்பட்டி, சேலம் 636 305.) அவர்கள் காடையாம்பட்டி மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 23.06.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.